[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் ] [1990 ஆகஸ்ட் 21

தயாராய் இருக்கிறேன். நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன் :

''முதல் பத்தியில், அரசியல் சட்டத்தின் 340-வது பிரிவின் படி' என்ற சொற்றொடருக்குப் பிறகு, 'மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா ஆட்சியிலே' என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அதர்களுடைய திருத் தத்தை ஏற்று அதை அரசின் சார்பாகவே கொண்டு வருகிறேன்.

நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''நீண்ட நெடுங்காலமாகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் நிறைவேறாத கோரிக்கையாக இருந்த மத்திய அரசின் பணிகளி லும் மற்றும் மத்திய அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனங்களின் பணிகளிலும் இட ஒதுக்கீடு என்பதை அரசியல் சட்டத்தின் 340வது பிரிவின்படி திரு. மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா ஆட்சியில் அமைக்கப்பட்ட மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்று 27 விழுக்காடு ஒதுக்கீடு செய்து ஆகஸ்டு 7ஆம் நாள் பாராளுமன்றத்தில் தேசிய முன்னணி அரசின் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் அறிவித்ததுடன், அதனை அன்று முதலே நடைமுறைப்படுத்த ஆணையும் பிறப்பித்துள்ளதை இந்தப் பேரவை மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றது.

12—5—1989 அன்று இந்தப் பேரவை பல ஆண்டுகளாகப் கவனிக்கப்படாமல் இருந்த மண்டல் குழு பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு பல வேண்டு கோள்கள் விடப்பட்டன என்பதை நினைவு கூர்கிறோம். இந்திய வரலாற்றிலேயே புதியதோர் சகாப்தமாக சமூக நீதி வழங்கிடும் இந்தப் புரட்சிகரமான முடிவை எடுத்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும், பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களுக்கும் இந்தப் பேரவை தனது இதயமார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.''

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவரவர்களே, ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தம் ஏற்றுக் கொள் ளப்பட்டால் அதில் வாதத்திற்கு இடமே கிடையாது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களின் தீர்மானம் விவாதத்திற்கு வைக்கப்படுகிறது, விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. குமரி அனந்தன்,

அவர்களே தொடங்கி வைத்தார்கள். நம்முடைய திரு. ராம்விலாஸ் பாஸ்வான் அவர்கள் தலைமை வகித்தார்கள். அந்தக் கூட்டத்தில் இந்தத் தொண்டனும் கலந்து கொண்டான். இந்தியா முழுவதும் இருந்து, கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டு, கிருஸ்துவ, முஸ்லீம், சீக்கிய, பௌத்த, சமண, பாரசீக எல்லா சிறுபான்மை மக்களும் வந்திருந்தார்கள். பிரதமர் ஒரு வாக்குறுதி கொடுத்து இருக்கிறார். அதிலே நமக்கு என்ன பங்கு கிடைக்கிறது என்று என்னைக் கேட்டால் நான் சொல்வேன், பங்கு மிக மிகக் குறைவு. எனக்கு திருப்தி இல்லை. கோபால்சிங் கமிஷன் பரிந்துரைகளை இந்தப் பாராளுமன்றக் கூட்டத்தில் சமர்ப்பித்து, அந்தப் பரிந்துரைகளை—கோபால்சிங் கமிஷன் என்பது மைனாரிட்டீஸ் ப்ராபிளம்—அரசு ஏற்று அதையும் நிச்சயம் நடைமுறைப் படுத்தும் என்ற வாக்குறுதியை பிரதமர் அவர்களே அந்த மாநாட்டில் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பரிந்துரைகளிலே கூட, அவருக்கு சரியாக உச்சரிக்கத் தெரியவில்லை, ஆனால் சொன்னார், தமிழகத்திலே இதிலே யார் பயன் அடைவார்கள், கிருஸ்தவர்கள், தாழ்த்தப்பட்ட கிருஸ்தவர்கள், கிருஸ்தவர்களாக மாறியவர்கள், முஸ்லீம்களில் தூதுகுலத்தவர்கள், லப்பைகள், தக்கினிகள்—அவர் உச்சரிப்பிலே கொஞ்சம் மாறுதல் இருந்தாலும்—குறித்து தனியாக தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் சொன்னார், வேறு மாநிலத்தைப் பற்றி அவர் விவரம் சொல்லவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துகொண்டு, போராடுபவர்கள் போராடிக்கொண்டே இருக்க வேண்டும் அழுதபிள்ளை தான் பால் குடிக்கும். எனவே திரு. சுந்தரராஜுடைய அழுகையோடு நானும் அழத் தயார். ஆனால், இந்த அரசு எப்படி பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இன்றைக்கு நீதி வழங்கியிருக்கிறதோ அதே அடிப்படையில் Constitutional legal and statutory status will be given to the Minorities Commission என்று அவர்கள் தெளிவாக அறிவித்து இருக்கிறார்கள் மைனாரிட்டி கமிஷனுக்கு சட்ட பூர்வமான அந்தஸ்தைக் கொடுப்போம் என்பதையும் தெரிவித்துக் கொண்டு நம்முடைய மைனாரிட்டி கமிஷனுக்கும் அந்த அந்தஸ்தை நம்முடைய முதல்வர் அவர்கள் கொடுப்பார்கள், நீங்கள் ஒன்றும் பயப்படத் தேவையில்லை என்பதை உங்களுக்குத்தெரிவித்துக கொண்டு, இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து, அமர்கிறேன்.

13-40 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு, அரசின் சார்பில் மூன்மொழிந்துள்ள மண்டல் குழு பரிந்துரைகளை மத்தியரசு நிறைவேற்றியமைக்காக நன்றியையும், பாராட்டையும் மாமன்றத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம்

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஆகஸ்ட் 21

என்ற கருத்து அடங்கிய தீர்மானத்தின்மீது, கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைத்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கருத்துக்களில் அவர்கள் தெரிவித்த கோணங்கள் அல்லது பாணிகள் வேறு வேறாக இருந்தாலும்கூட, எல்லோருடைய குறிக்கோளும், இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பது என்கின்ற வகையிலே அமைந்து, மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளில் இழையோடிக் கொண்டிருக்கிற உண்மை என்ன என்ற அடிப்படையிலே விவாதித்திருக்கிறார்கள்; தீர்மானத்தை ஆதரித்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை, இந்த அவையிலேயுள்ள எல்லாக் கட்சியினரும், குறிப்பாக, எதிர்க் கட்சியினரைச் சார்ந்தவர்களும் இருந்து, ஆதரித்திருந்தால் நலமாக இருந்திருக்கலாம் அல்லவா என்பதைச் சொல்லாமற் சொல்லி, நமமுடைய திரு. பி. எச். பாண்டியன் அவர்கள், விட்ட குறை—தொட்ட குறை விடாத காரணத்தினால், தன்னுடைய வேதனையை இங்கே வெளிப்படுத்திக் கொண்டார்கள். பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக நீண்ட நெடுங்காலமாக, நம்முடைய கோரிக்கையாக இருந்து வந்த, மண்டல் குழு பரிந்துரைகளினுடைய நிறைவேற்றம், முதற் கட்டமாக இன்றைக்கு வெற்றி பெற்று, நம்மையெல்லாம் மகிழ்ச்சியிலே ஆழ்த்தியிருக்கிறது. முழுமையாக மண்டல் குழு பரிந்துரைகளையோ அல்லது மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளுக்கும் அப்பாற்பட்ட, இன்னும் மேலாகக் கிடைக்கவேண்டிய உரிமைகளையோ, சலுகைகளையோ நாம் பெற வேண்டுமென்று வாதாடுவதற்கு ஒரு அடித்தளம் அமைக்கப்பட்டிருக்கிறது என்ற அளவில் இதை வரவேற்றுப் பாராட்ட அனைவரும் கடமைப்பட்டிருக்கிறோம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தினுடைய தாய் நிலம், இந்தியத் திருநாட்டில்—இந்தியத் திருநாட்டின் தென்கோடி முனையான ‘தென்னகம்’ என்பதும் அதுவும் குறிப்பாக, இந்தத் “தமிழ் நிலம்” என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

நீதிக் கட்சிக் காலத்தில் ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கு முன்பு, இத்தகைய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேவை என்று குரல் எழுப்பப்பட்ட பின்னர், 1926–27 என்கிற கால கட்டத்தில், அன்றைய தினம் அமைச்சர் பொறுப்பில் இருந்த திரு. முத்தையா முதலியார் அவர்கள், அரசு ஆணையாகப் பிறப்பித்த அந்தக் காலக் கட்டத்தின் முதற்படிதான் இன்றைக்கு அது எந்த அளவிற்கு தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் வளர்ந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது ஒரு 14 அல்லது 15 உத்தியோகங்களில் யார்யாருக்கு எவ்வளவு இடம், எத்தனை பேருக்கு 4 இடம்; யாருக்கு 3 இடம்; யாருக்கு 2 இடம் என்றெல்லாம் இடங்கள் ஒதுக்கப்பட்டு, அது கூட ‘ரொட்டேஷன்’ முறையில்தான் வருமென்ற நிலை வகுக்கப்பட்டு இப்படி உருவானது தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்.

*1990 ஆகஸ்ட் 21] [டாக்டர் மு. கருணாநிதி]*

இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவரும், மற்றும் உறுப்பினர்களும் கூட, இது ஏதோ காங்கிரஸ்—கழகம் இரண்டுக்குமிடையே உள்ள ஒரு போராட்டம் என்பதுபோல் எண்ணிக் கொண்டு, கருத்துக் களைப் பரிமாற வேண்டிய அவசியம் அந்தத் தரப்பிலே பேசியவர்களானாலும், இந்தத் தரப்பிலே பேசியவர்களா னாலும் இருப்பதை நான் உணராமல் இல்லை. ஆனால், என்னுடைய அருமை நண்பர், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலனில் எவ்வளவு அக்கறை உள்ளது என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

ஆனால், காங்கிரஸ் இயக்கத்தைப் பொறுத்தவரையில், தொடக்க காலத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள் கைக்கு விரோதமாக—மாறாக, கருத்துக்களைச் சொல்லி வந்த இயக்கம் என்பதை வரலாறு கூறுகிறது. அந்தக் காரணத்தினாலே தான், காங்கிரஸ் இயக்கத்தினுடைய பெரும் தளபதியாக தென்னகத்திலே அன்றைக்கு உலா வந்த தந்தை பெரியார் அவர்கள் இரண்டு, மூன்று முறை நீதிக்கட்சி கடைப்பிடிக்கின்ற வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை காங்கிரஸ் கட்சி ஏற்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே வலி யுறுத்தி அதை காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொள்ளாத காரணத் தினால், காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டி லிருந்து, தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் தலைமை யிலே நடைபெற்ற மாநாட்டிலிருந்து, காங்கிரஸை விட்டு அவர்கள் வெளியேறினார்கள் என்பதெல்லாம் கடந்த கால சரித்திர உண்மைகள்.

*13–45 மணி*

அதற்குப் பிறகு திரு. ஓ. பி. ராமசாமி போன்றவர்களும், பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்களும், காங்கிரஸ் இயக்கத்திலே பெரும் செல்வாக்கு மிக்க இடங்களைப் பெற்ற வர்கள். அந்தக் காலகட்டத்திலே தந்தை பெரியாருடைய கொள்கைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டு, அப்படி ஏற்றுக் கொண்ட திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியாரைப் பார்த்து இவர் தாடி வைக்காத ராமசாமி என்றெல்லாம் கூட கேலி பேசுகிற, எதிர்த்துப் பேசுகிற அளவுக்கு திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்களும், பெருந்தலைவர் காமராஜர் அவர் களும் பெரியாருடைய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கை களின் அடிப்படையை ஏற்றுக்கொண்டு பணியாற்றினார்கள். எனவே தொடக்க காலத்திலே காங்கிரஸுக்கு உடன்பாடாக அந்த இயக்கத்திலே இல்லாத ஒன்று, அதற்குப் பிறகு காங்கிரஸ் தலை எடுத்த, செல்வாக்குப் பெற்ற தலைவர் களால் ஏற்றுக்கொள்ளப்பெற்று, அப்போதும் அது காங்கிரஸ் கட்சியினுடைய முழு முதல் கொள்கை என்று ஏற்றுக்கொள்ளப்

படாமல், அதில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட தலைவர்களால் மாத்திரம் போற்றப்படக்கூடியதாக, பாதுகாக்கப்படக்கூடிய தாக அந்தக் கொள்கை இருந்தது என்பதை யாரும் மறந்து விடுவதற்கில்லை.

அண்மையில் கூட அ.தி.மு.க. ஆட்சியில் என்னுடைய அருமை நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 9,000 ரூபாய் என்று உச்சவரம்பைக் கொண்டு வந்த அந்தக் கால கட்டத்திலே இதை எதிர்க்கிறோம் என்று திராவிடக் கழகத்தின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத் தின் சார்பிலும் இயக்க ரீதியாக எதிர்ப்புக் காட்டியபோது அன்றைக்குக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே அதற்கு எதிர்ப்புக் காட்டவில்லை இயக்க ரீதியாக. ஆனால் திண்டிவனம் ராமமூர்த்தி போன்ற நண்பர்கள், ரமணிபாய் போன்றவர்கள், காங்கிரஸ் கட்சியிலே இருந்தவர்கள், மணிவர்மா போன்ற வர்கள் எல்லாம் அன்றைக்கு நாங்கள் நடத்திய கண்டனக் கூட்ட மேடைகளில் வந்து கலந்துகொண்டு 9,000 ரூபாய் உச்சவரம்பு என்று அன்றைக்குக் கொண்டுவரப்பட்டதை எதிர்த்து இருக்கிறார்கள். எனவே காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக கட்சி ரீதியாக இந்தக் கொள்கை எங்களுடையது என்று கூறி அதை அவர்கள் ஆதரிக்க வராவிட்டாலும் கூட, அதிலே உள்ள தனிப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதா யத்தைச் சேர்ந்த தலைவர்கள் அன்றைய தினம் அதற்கு ஏற்பட இருந்த ஊனத்தைப் போக்க, ஆபத்தைத் தடுக்க, அபாயத்திலிருந்து மீட்க அவர்கள் போராடி இருக்கிறார்கள். அதைப் போல்தான் அரசியல் சட்டத்திற்கு ஒவ்வாத ஒன்று இது என்று அல்லாடி போன்றவர்கள் வாதாடியபோது பிற்படுத் தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகள் எல்லாம் அடிபட்டுப் போகிற நேரத்தில் இதே மன்றத்தில் நான் முதலிலே குறிப்பிட்டதுபோல் கோசல்ராம், ஆர். வி. சுவாமி நாதன் போன்ற காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் எல்லாம் இதைச் சட்டமாக ஆக்க வேண்டுமென்று, அரசியல் சட்டத் தைத் திருத்த வேண்டுமென்று பேசிய பேச்சுக்கள் எல்லாம் இன்றைக்கும் பதிவேடுகளில் ஒளிவிட்டுக்கொண்டிருக்கின்றன.

இப்போதும் நான் சொல்கிறேன். இது ஒரு கட்சியி னுடைய கொள்கையாக இல்லாமல் அந்தக் கட்சியிலேயுள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களால் அன்றைக்குப் பாது காக்கப்பட்ட ஒரு கொள்கையாகத்தான் இருந்தது என்பதற்கு இவைகள் எல்லாம் ஆதாரங்கள் ஆகும்.

இன்று இந்தத் தீர்மானத்தினுடைய அடிப்படை அம்சமாக இருக்கின்ற பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுக்குப் பாராட்டு, நன்றி, என்கிற அந்தக் கருத்துக்களைப் பற்றி காங்கிரஸ் கட்சி யின் சார்பில் பேசும்போது அவர்கள் சொன்ன கருத்து ஏதோ நிலைமையை உத்தேசித்து தேவிலால் பிரச்சினைக்காக இதை

*1990 ஆகஸ்ட் 21]* *[டாக்டர் மு. கருணாநிதி]*

பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு ஆதாரமாக பாரதீய ஜனதா கட்சி இப்படி சொல்லி இருக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்கள். பாரதீய ஜனதா கட்சிக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையில் வேறுபாடான கருத்து உண்டு என்பதை இந்த அவையிலே உள்ள அனைவரும் மிக நன்றாக அறிவோம். இருந்தாலும் கூட நண்பர் திரு. லத்தீப் எடுத்துக் காட்டியதைப் போல தோழமையாக இருந்து ஆதரவு அளித்துக்கொண்டிருக்கிற கட்சியே எதிர்த்தாலும் கூட அதனால் வருகிற விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள் என்பதற்காகத்தான் இதை நாம் பாராட்டவேண்டும். மிகப் பெரும்பான்மையாக இருந்து அதன் காரணமாக அறிவித்தார் என்பது வேறு, சிக்கலான நேரத்தில்கூட இதை அறிவிக்கிற துணிவு, அந்த எண்ணம் அவருக்கு இருந்தது என்ற அந்த அளவில் பாராட்டுவதற்கு ஒரு தனிச் சிறப்பே இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இது தேவிலால் பிரச்சினைக்குப் பிறகு ஏற்பட்டதல்ல. இதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழகமும் தேசிய முன்னணியில் இடம் பெற்றிருக்கின்ற காரணத்தால், இந்த வரலாறு எனக்கு மிகத் தெளிவாக முழுமையாகத் தெரியும்.

13-50 மணி

தேசிய முன்னணி, பாராளுமன்றத் தேர்தலில் ஈடுபடுவதற்கு முன்பு, டெல்லியிலேகூடி தேர்தல் அறிக்கையைத் தயாரித்தபோது, நானும் அந்த அறிக்கையைத் தயாரிக்கின்ற பணியிலே ஈடுபட்டு பங்கு பெற்றேன். அந்த நேரத்தில், தேவிலால் அவர்களும் இருந்துதான் இந்த மண்டல் கமிஷன் பரிந்துரையை நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் நிறைவேற்றுவோம் என்ற உறுதிமொழி தேர்தல் அறிக்கையில் சேர்க்கப்பட்டது.

சேர்க்கப்பட்டது மாத்திரம் அல்ல, தேவிலால் அவர்கள் தேசிய முன்னணி ஆட்சி பொறுப்புக்கு வந்தபிறகு, துணைப்பிரதமராக பொறுப்பேற்ற பிறகு, மண்டல் கமிஷன் அறிக்கை பற்றி ஆய்ந்து அறிக்கை தர, எப்படிச் செயல்படுவது என்பது பற்றி அறிந்து அறிக்கை தர, தேவிலால் அவர்களையே தலைவராகக் கொண்ட ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. இது தேவிலால் பிரச்சினைக்காகத் தான் வந்தது என்றால், தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் மண்டல் குழு பரிந்துரையை நிறைவேற்றுவோம் என்ற உறுதி

மொழி ஏற்கெனவே தரப்பட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. இதிலிருந்தே இது தேவிலால் பிரச்சினைக்காக வந்தது என்ற வாதம் மிகத் தவறானது என்று தெரிய வரும்.

அது மாத்திரமல்ல, ஒன்றை உங்களுக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 12-6-1990 அன்று பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் மாநில முதலமைச்சர்களுக்கெல்லாம் கடிதம் எழுதுகிறார்கள். அப்போது தேவிலால் பிரச்சினை வரவில்லை. அந்தப் பிரச்சினை ஆகஸ்டில்தான் வந்தது. கடிதம் ஜூன் மாதத்தில் எழுதப்பட்டது. எல்லா முதலமைச்சர்களுக்கும் எழுதிய கடிதம் அது. எனக்கும் கடிதம் எழுதியிருக்கிறார். அதில்,

"Dear Shri Karunanidhiji,

I am writing to you to-day on issues concerning the vital interest of the Backward Classes in our country. It has been 10 years since the Second Backward Classes Commissson headed by Sri Mandal submitted its report. This Commission has made some important recommendations on improving the conditions of the socially and educationally Backward Classes of the country. You would agree that we have to provide special safeguard for the Backward Classes. Your views on all the issues involved would therefore be of crucial importance to us. As the new Central Government is committed to taking an early decision on the recommendations of the Commission I would be grateful to hear your considered views by the end of this month. This would help us to take an early final decision on implementing the various recommendations of the Mandal Commission".

ஜூன் மாதம் 12-ந் தேதி அவர் கடிதம் எழுதி மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்றுவதற்கு, பிற்படுத்தப் பட்ட மக்களைக் கைதூக்கிவிடுவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டு, ஜூன் மாதக் கடைசிக்குள்ளாக முதலமைச்சர்களுடைய கருத்துக்களை அறிந்து கொள்ள விரும்பி, அதற்குள்ளாகக் கருத்துக்களை அறிவிக்கச் சொல்கிறார்.

அதைப் போலவே உடனடியாகத் தமிழக அரசின் சார்பில் அந்த மாத இறுதி வாரத்தில் அவருக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன்.

"Dear Prime Minister,

Thank you for your letter of 12th June calling for our State Government's views on the recommendations of the Mandal Commission I am enclosing a detailed statement, containing our views on the various recommendations of the Mandal Commission. I wouldlike to high-light a few of the salient points. As you yourself have said we have to provide special safeguards for the Backward Classes. The special

1990 ஆகஸ்ட் 21] [டாக்டர் மு. கருணாநிதி]

safe-guards can only be in the form of Reservation in Government services and Educational Institutions besides the various concessions for the educational and economic advancement of the Backward Classes. Such safeguards alone can ensure social justice to these disadvantaged communities as envisaged by the founding Fathers of our constitution. Regarding the list of Backward Classes to be adopted for the implementation of the concessions recommended by the Mandal Commission I would strongly urge the Government of India to adopt the State Goverments' list of Backward Classes with respect to each State. I would like to drow your particular attention to the strong recommendation of the Mandal Commission that all developmental programmes specially designed for the Backward Classes should be financed by the Central Government in the same manner and to the same extent as is being done in the case of Scheduled Castes and Scheduled Tribes. I would like to add that the urgency for the implementation of the Mandal Commission's recommendations cannot be over-emphasised and all of us look forward to your early decision on this subject which will open a new era for the Backward Classes under your dynamic leadership. "

13-55 மணி

இது ஜூன் மாதத்திலே நடைபெற்ற கடிதப் போக்குவரத்து, எனவே, தேவிலால் பிரச்சினைக்கும் இதற்கும் துளியும் சம்பந்தமில்லை. அதுமாத்திரமல்ல, தேவிலால் பிரச்சினையோடு சம்பந்தமுடையது என்று எண்ணுகின்றவர்களும் ஒரு விளக்கத்தைப் பெற வேண்டும். நாம் வகுத்துக் கொண்டிருக்கிற அல்லது வகுக்கப்பட்டதாய் ஏற்றுக்கொண்டிருக்கிற ஜாதி முறைப்படி, தேவிலால் அவர்கள் ஜாட் வகுப்பைச் சார்ந்தவர்கள். ஜாட் வகுப்பு பிற்பட்ட அல்லது பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள வகுப்பு அல்ல. எனவே, அந்த வகுப்பை தன் வயப்படுத்த வேண்டுமென்று தந்திரமாக திரு. வி.பி. சிங் அதை அறிவித்தார் என்று யாராவது எண்ணிச் சொல்வார்களேயானால் அது தவறு. பெரும்பாலான எண்ணிக்கை கொண்ட, ஜாட் வகுப்பு இதுவரையில்—நாளைக்கு சேர்க்கப்படலாம். அது வேறு விவகாரம், இதுவரை அந்த வகுப்பு—பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெறாத வகுப்பு என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் நான் அலகாபாத் சென்றது 1975 ஆம் ஆண்டு என்று சொன்னார். அல்ல, 1973 ஆம் ஆண்டு. மேலும் அங்கு பேசியது என்பது அல்ல. அதற்கு முன்பே திராவிட இயக்கத்தின் சார்பாக, தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஆகஸ்ட் 21

அவர்கள், இவர்கள் எல்லாம் எடுத்து வைத்த கருத்து மாநில அளவிலே இருக்கின்ற இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இந்திய நாட்டின் அளவிலேயும் பரவிட வேண்டும் என்பதாகும். அந்தக் கருத்தைத்தான், பிற்படுத்தப்பட்டோர் மாநாடு அலகாபாத்தில் 1973 ஆம் ஆண்டு நடைபெற்ற பொழுது, அன்றைக்கு முதல்வராக ஆட்சிப் பொறுப்பிலிருந்த நான் அழைக்கப்பட்டு, அந்த மாநாட்டில் நான் பேசியபோது, மத்திய அரசு பொறுப்புகளிலும், அரசு சார்புடைய பொது நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்க வேண்டுமென்று அறிவித்தேன். அந்த மாநாட்டிலே அதுபோல ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து அதை நாம் வலியுறுத்திக் கொண்டு வந்த காரணத்தினால், 1978 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராக ஜனதா கட்சியின் சார்பில் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தபோது 20-12-1978 அன்று, மண்டல் கமிஷன் நியமிக்கப்படுமென்கின்ற அறிக்கை வெளிவந்து அது நியமிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. அந்தப் பணி முடிவடைந்தபோது திரு. மொரார்ஜி தேசாய் பதவியில் இல்லை. அது அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த காலம். 31-12-1980 அன்று, அன்னை இந்திரா காந்தி அவர்களிடத்திலே அந்த அறிக்கை வழங்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டிலே வழங்கப்பட்ட அந்த அறிக்கை 30-4-1982 அன்று, அதாவது 2 ஆண்டுகள் கழித்துதான் பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டது. எனவே, ஒரு பத்தாண்டுக் காலம், அந்த அறிக்கையைப் பற்றி எந்த விதமான சாதகமான பதிலும் நமக்குக் கிடைக்கவில்லை.

இதே மாமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசு மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, 1989 ஆம் ஆண்டு மே மாதம் மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு, பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அதற்கு அவர்கள் கொடுத்த பதில் ''நீங்கள் அனுப்பிய தீர்மானம் கிடைக்கப்பெற்றோம்'' என்றுதான் வந்ததே தவிர, அதைப்பற்றிய வேறு எந்தக் கருத்தும் நமக்கு பதிலாக வரவில்லை. உண்டு, இல்லை என்று வரவில்லை. அதற்கு முன்பு கூட 1988 ஆம் ஆண்டிலேகூட மண்டல் குழு பற்றி தமிழக அரசின் சார்பாக ஒரு கடிதம் எழுதப்பட்டபோது, அதற்கு திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய அரசின் சார்பில் அனுப்பப்பட்ட பதிலில் Status quo இப்பொழுது உள்ள நிலைமை நீடிக்கட்டும் பிறகு பார்க்கலாம் என்றுதான் அப்போதும் பதில் வந்திருக்கிறது.

14-00 மணி

எனவேதான் ஒரு பத்தாண்டுக் காலத்திற்குப் பிறகு, அது கிடப்பிலே போடப்பட்டதோ அல்லது அவர்கள் சொன்னது போல ஆராயப்பட்டதோ எனக்குத் தெரியாது. எனவே பத்தாண்டுக் காலம் மண்டல் குழுவின் பரிந்துரைகள் இந்தப் பயணத்திலே, பிற்படுத்தப்பட்ட மக்களை முன்னேற்றுகின்ற பயணத்திலே ஒரு அடி கூட எடுத்து வைக்கவில்லை. நான் எண்ணிப் பார்க்கிறேன், 1982 ஆம் ஆண்டிலேயே இந்தப் பரிந்துரை வந்திருக்குமானால் இன்றைய தினம் நாம் எத்தனை பிற்படுத்தப்பட்ட மக்களை மத்திய அரசு அலுவலகங்களில் பெரிய பணிகளிலே பார்த்துக் களித்திருக்க முடியும் என்று. எனவே ஒரு பத்தாண்டுக் காலத்தை இந்திய நாட்டு வரலாற்றிலே பிற்படுத்தப்பட்ட மக்கள் எப்படியோ இழந்து விட்டார்கள் என்பதைத் தான் நாம் எண்ண வேண்டியிருக்கிறது. இதைத் தான் இங்கே நண்பர் திரு. வல்லரசு அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

மண்டல் குழு தன்னுடைய அறிக்கையைத் தயாரித்து வழங்கியபோது, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நிலை மத்தியிலே எப்படி இருக்கிறது என்பதை விளக்கி இருக்கிறது. அதை நான் புள்ளி விவரத்தோடு இங்கே சொல்லுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். மத்திய அரசுத் துறையிலும், தொடர்புடைய மற்றத் துறைகளிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு இடம் இருந்தது என்பதற்கான புள்ளி விவரங்கள், மண்டல் வழங்கிய புள்ளி விவரங்கள் இவை.

பாதுகாப்புத் துறையில் கிளாஸ்—1 அதிகாரிகள் பதவி. மொத்த அலுவலர்கள் 1379 பேர். அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 48 பேர். ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு விகிதாச்சாரம் இல்லாவிட்டாலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 22.5 சதவிகிதம் உண்டு. 15 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு; 7.5 சதவிகிதம் மலைவாழ் பழங்குடி மக்களுக்கு. இரண்டும் இணைந்து 22.5 சதவிகிதம். அந்த 22.5 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பாதுகாப்புத் துறையிலே என்றால், கிரேட்—1 அலுவலர் பதவியிலே அவர்களுக்குக் கிடைத்து இருக்க வேண்டியது 310 இடம். விகிதாச்சாரப்படி, உரிமைப்படி கிடைக்க வேண்டியது 310 இடம். ஆனால் அவ்வாறு தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைக்க வில்லை. கிடைத்த இடமே 48 தான். மொத்தம் 1379-ல் தாழ்த்தப்பட்டோருக்கு 48 இடம், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 9 இடம். இன்று 27 சதவிகிதம் தரப்பட்டிருக்கிறதே, இதன்படி ஏற்கனவே தரப்பட்டிருந்தால் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கிடைத்திருக்கக் கூடிய இடம் 372. பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டிய 372 இடங்களுக்குப் பதிலாக பாதுகாப்புத்

துறையிலே 9 இடங்கள்தான் கிடைத்திருக்கின்றன. ஏனைய உயர் வகுப்பாருக்கு 1322 இடங்கள் கிடைத்திருக்கின்றன. பாதுகாப்புத் துறையில் கிளாஸ்-2 அதிகாரிகள் பதவியில் மொத்த அலுவலர்கள் எண்ணிக்கை 7752. இதிலே தாழ்த்தப்பட்டவர் கள் 803, பிற்படுத்தப்பட்டவர்கள் 187. உயர் வகுப்பினர் 6762. கிளாஸ் 3, கிளாஸ் 4, ஆக இரண்டிலும் பாதுகாப்புத் துறையில் மொத்த அலுவலர்கள் 2127. இதில் தாழ்த்தப்பட்ட வர்கள் 604. பிற்படுத்தப்பட்டவர்கள் 131. இன்று அறிவித் துள்ள 27 சதவிகிதம் கிடைக்குமேயானால் 574 பேர் அங்கே இடம் பெற்றிருக்க முடியும். பாதுகாப்புத் துறையிலே அனைத் துத் தர அதிகாரிகளையும் மொத்தமாகச் சேர்த்துப் பார்த்தால் மொத்த அலுவலர்கள் 11258 பேர். இதிலே உயர் சாதிக் காரர்கள் 10476 பேர்; பிற்படுத்தப்பட்டவர்கள் 327 பேர்; தாழ்த்தப்பட்டவர்கள் 1455 பேர்.

நிதித் துறையில் கிளாஸ் 1 அதிகாரிகள் மொத்தம் 1008 பேர். இதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 66 பேர், உயர் சாதிக் காரர்கள் 941 பேர். பிற்படுத்தப்பட்டவர்கள் 1. ஒன்றே ஒன்று, கண்ணே கண்ணு என்பார்களே அதைப்போல, 1008 கிளாஸ் 1 அதிகாரிகள் உள்ள நிதித் துறையிலே உயர் வகுப் பார் 941, பிற்படுத்தப்பட்டவர்கள் ஒன்றே ஒன்று.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

14-05 பணி

நிதித் துறையிலே கிளாஸ்-2 அதிகாரிகள் மொத்தம் 2,824. அதிலே உயர் சாதிக்காரர்கள் 2507 பேர், தாழ்த்தப்பட்டோர் 306, பிற்படுத்தப்பட்டோர் 11. நிதித் துறையிலே கிளாஸ்-3, கிளாஸ்-4, மொத்தம் 821 பேர். அதிலே தாழ்த்தப்பட்டோர் 202; உயர் சாதிக்காரர்கள் 606; பிற்படுத்தப்பட்டோர் 13 பேர்.

செய்தித் துறையில் மொத்தப் பணியாளர்கள் 16,505. அதில் உயர் வகுப்பார் 11,498 பேர், தாழ்த்தப்பட்டவர் 3,660, பிற்படுத்தப்பட்டவர் 1,347. திட்டத் துறை மொத்தப் பணி யாளர்கள் 6,917 பேர். அதிலே உயர் வகுப்பார் 4,582 பேர். தாழ்த்தப்பட்டவர் 977 பேர், பிற்படுத்தப்பட்டவர் 358 பேர். சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்துத் துறையில் மொத்தப் பணியாளர்கள் 9,185 பேர். அதிலே உயர் சாதிக் காரர்கள் 6,463 பேர், தாழ்த்தப்பட்டவர்கள் 2,181, பிற் படுத்தப்பட்டவர்கள் 541. குடியரசுத் தலைவர் அலுவலகத்தில் மொத்தப் பணியாளர்கள் 307. தாழ்த்தப்பட்டவர் 47 பேர், உயர் சாதிக்காரர்கள் 260, பிற்படுத்தப்பட்டவர் இல்லை.

மண்டல் இந்த அறிக்கையைத் தயாரித்து இந்தப் பரிந்துரை வழங்கியபொழுது அவர் அளித்த புள்ளி விவரம் இது. இதற்குப் பிறகும் ஒரு சமூக நீதிக்காக நாம் போராடுவது எவ்வளவு நியாயமானது என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றே கருதுகின்றேன். எனவே தான் இன்றைக்குக் கிடைத்து இருக்கின்ற இந்த சமூக நீதி தமிழக வரலாற்றிலே ஏற்கனவே கிடைத்த ஒன்று என்றாலும் கூட அது இன்றைக்குப் பெருகிப் பல்கி வளர்ந்து கொண்டிருக்கிறது என்றாலும் கூட, இந்தியத் திருநாட்டிலே ஒரு பெரிய சரித்திரத் திருப்பத்தை, ஒரு புதிய சகாப்தத்தை இன்றைக்கு உருவாக்கி இருக்கிறது. அதனால் தான் பிரதமர் வி. பி. சிங் அவர்கள் 7-ஆம் தேதி இதை அறிவித்து விட்டு, ஆகஸ்ட் 9-ஆம் தேதி அதைப் பற்றிப் பேசும்பொழுது, "In fact this is the realisation of the dream of Bharath Ratna Dr. Ambedkar, of the great Periyar Ramasami and Dr. Ram Manohar Lohia. It has been the aspirations of a very large section of people who in the present system are condemned to social inequity since their very birth to their last breath and whatever they may be, whatever their performance, whatever their merit, they are unable to break the shackles throughout their life." என்கின்ற முன்னுரையோடு அவருடைய பேச்சைத் தொடங்கி இந்த மண்டல் குழுவினுடைய பரிந்துரையை நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஏன் தனக்கு ஏற்பட்டது என்பதையெல்லாம் எடுத்துக்காட்டி இருக்கின்றார்.

அவர் இதை அறிவித்ததிலேயே எவ்வளவு மகிழ்ச்சி அடைந்து இருக்கிறார் என்பதை அவர் பயன்படுத்தி உள்ள வார்த்தைகளை எல்லாம் பார்க்கும்பொழுது மிக நன்றாகத் தெளிவாக நமக்குப் புரிகின்றது. சொல்லப்படுகின்ற குறை இது. கல்விச் சாலைகளுக்கும் அங்கே கிடைக்கின்ற வாய்ப்புகளுக்கும் இதிலே இடம் இல்லை. சிறுபான்மை மக்களுக்கு இன்னும் ஏதாவது செய்ய வேண்டும் என்பது போன்ற சில கருத்துக்களைத் தான் அவர் குறிப்பிட்டு இருக்கிறார். இது முதல் கட்டம் என்று குறிப்பிட்டு இருக்கிறார். முதல் கட்டமாக இதை அறிவித்து இருக்கின்றோம். அடுத்தடுத்து மேலும் மேலும் உணரக் கூடிய பல்வேறு யோசனைகளை, கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கொண்டு அதை விஸ்தரிக்க முடியும், விரிவாக்க முடியும் என்ற கருத்தோடுதான் அவைகளை எல்லாம் எடுத்துக் காட்டி இருக்கின்றார். பொருளாதார அடிப்படை வேண்டும் என்று சொல்கின்றார்கள். இதுவரையிலே போராடியது எல்லாம் பொருளாதார அடிப்படை கூடாது; சமூக ரீதியாக, கல்வி ரீதியாகப் பின்தங்கிய மக்கள் என்று தான் இருக்க வேண்டும் என்றுதான் ஒரு எழுச்சி 1952 ஆம் ஆண்டு ஏற்பட்டது. அன்றைக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்குக் குழி தோண்டப்பட்டபொழுது தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் தமிழகத்திலே அன்றைக்குத் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருந்தாலும்கூட

இந்தக் கொள்கையிலே ஒன்றுபட்டு நின்று, தமிழகத்தில் அன்றைக்கு ஒரு பெரும் புயல் வீசியபொழுது தான் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முதன் முதலாக அரசியல் சட்டத்தில் முதல் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த முதல் திருத்தத்தைக் கொண்டுவரும் பொழுது அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு முன்பு கூட எனக்குத் தெரியும், நான் படித்து இருக்கின்றேன். ஒ. பி. இராமசாமி போன்றவர்கள் நேரு அவர்களிடத்திலே அணுகி பிற்படுத்தப்பட்ட மக்களை சமூக ரீதியாக, கல்வி ரீதியாக பின்தங்கிய மக்கள் என்று அறிவிக்க வேண்டும் என்று சொன்னபொழுதெல்லாம் நேரு அவர்கள் மிகக் கடுமையாகப் பதில் சொன்னார் என்பதும், அதன் காரணமாக ஒ. பி. இராமசாமி அவர்கள் பதவியையே ராஜினாமா செய்யத் தயாராக இருந்தார் என்பது வரலாறு ஆகும்.

14-10 மணி.

ஆனால் தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட பெரிய கிளர்ச்சி ஏற்பட்ட பிறகு அந்தக் கிளர்ச்சியைப் பற்றி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

''You know what was the immediate cause for bringing the first amendment to the Constitution. You all know that there are certain happenings in Madras State which led us to make this amendment.''

என்று சொல்லிவிட்டுத்தான் அந்தத் திருத்தத்தை பண்டித ஜவஹர்லால் நேரு கொண்டு வந்திருக்கிறார். அப்படிக் கொண்டு வருகிறபோது குறிப்பிடுகிறார். இப்போது சில பத்திரிகைகளிலே—இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே கட்டம் கட்டிப் போடுகிறார்கள், ஜவஹர்லால் நேரு அப்பொழுது பொருளாதார அடிப்படையை ஒத்துக்கொள்ளவில்லை என்று. இவையெல்லாம் நேரு இந்தத் திருத்தம் கொண்டு வருவதற்கு முன்பே சொன்னது. ஆனால் திருத்தம் கொண்டுவரும் போது பண்டித நேரு என்ன சொன்னார் ? பொருளாதார அடிப்படை என்று அமைத்துவிட்டால், பொருளாதார நிலை என்பது நிரந்தரமானது அல்ல. ஒருவன் இந்த ஆண்டு பணக்காரனாக இருப்பான். அடுத்த ஆண்டு அவனுக்கு வருமானம் இல்லாமல் போய்விடும். அடுத்த ஆண்டு வருமானம் வரக்கூடும். எனவே பொருளாதார அடிப்படை என்று போடக் கூடாது என்பதுதான் நேரு அவர்கள் அன்றைக்கு அளித்த தெளிவான பதிலாகும். எனவேதான் நம்முடைய தமிழகத்திலே கூட இது வரையிலே நாம் சோஷயலி, எஜுகேஷனலி பேக்வர்ட் என்று சொன்னாலுங்கூட

'சோஷயலி' என்பதைத்தான் அதிகமாக வற்புறுத்தி அந்தச் சமுதாய மக்களுக்கு இட ஒதுக்கீடுகளைச் செய்து வந்திருக்கிறோம்.

இங்கே நம்முடைய நண்பர் சுந்தரதாஸ் குறிப்பிட்டதைப் போல, மற்ற நண்பர்கள் குறிப்பிட்டதைப் போல படித்த வீட்டுப் பிள்ளைகள்தான் மேலும் பட்டதாரிகளாக வருகிறார்கள், எனவே அதுவே ஒரு தனி சமுதாயமாக ஆகிவிடுகிறது, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற சொற்றொடர்களைப் பயன்படுத்திக் கொண்டு, வளர்ந்தவர்களே வளர்கிறார்கள், படித்தவர்களே மேலும் படிக்கிறார்கள், கிராமத்தில் உள்ள படிக்காத வீட்டுப் பிள்ளைகள் படிக்காதவர்களாகவே இருக்கிறார்கள் என்றார். இந்தக் குறையைக் களைவதற்காகத்தான் இந்த ஆண்டு நம்முடைய அரசு 5 மதிப்பெண்கள் தருகிறது. திரு. பாண்டியன் சொன்னதைப் போல இலவசமாக தருவதல்ல. அவன் 230 மதிப்பெண்கள் வாங்கினால், அதற்குப் பிறகு தருவது தான் இந்த 5 மதிப்பெண்கள். திடீரென்று 230 மதிப்பெண்கள் தருகிறேன் என்று யாருக்கும் தருவதில்லை. அந்த 5 மதிப்பெண் தருகிற நேரத்தில் நல்ல மார்க் எடுத்தவன் கெடுக்கப்படுகிறான் அல்லது பாதிக்கப்படுகிறான் என்று சொல்லுகிறார்கள். அப்படி பாதிக்கப்படுகிறவர்கள் பட்டதாரிக் குடும்பத்திலிருந்து வந்தவர்களாகத்தான் இருக்க முடியும். முதன் முதலாக ஒரு குடும்பத்திலிருந்து வருகிற பட்டதாரி என்று எடுத்துக்கொள்ளும் போது அவன் உள்ளபடியே பட்டதாரியாக அந்தக் குடும்பம் இல்லாததற்கு முழு முதற் காரணம் வறுமையாகத்தான் இருக்க முடியும். அப்படி வறுமை நிலைமையிலே இருக்கிற காரணத்தால்தான் அங்கே பட்டதாரிகள் உருவாகவில்லை. அப்படி உருவாகாத குடும்பத்திலிருந்து பட்டதாரி வர வேண்டும் என்பதற்காகத்தான் 5 மதிப்பெண்கள் அதிகமாக தருவது என்று இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு அது நல்ல முறையிலே செயல்பட்டிருக்கிறது.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான், இந்த ஆண்டிலிருந்துதான் செயல்படுகிறது. நம்முடைய திரு. குமரி அனந்தன் எடுத்துக்காட்டியதைப் போல பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் 1957ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் என்ற பட்டியல் தயாரித்து இந்த அவையிலே வைத்தார்கள். நான் அந்த இடத்திலே உட்கார்ந்து படித்துப் பார்த்திருக்கிறேன். அப்படி வைக்கப்பட்ட அறிக்கை சலுகைகளுக்காகத்தான், உரிமைகளுக்காக அல்ல. ஒன்லி ஃபார் கன்செஷன். கன்செஷன் வேறு, ரிசர்வேஷன் வேறு. அதாவது இலவசக் கல்வியைப் பெற, கல்வியிலே ஊக்கம் அளிக்க, இப்படிப்பட்ட காரியங்களுக்காக மிகவும் பிற்படுத்தப்பட்

டோர் என்ற பட்டியல் அன்றைக்கு உருவாக்கப்பட்டது. மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்ற கிளர்ச்சி மதிக்கப்பட்டு, கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே 20 சதவீதம் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. அந்த மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களில் வன்னியர்கள், முக்குலத்தோர் அதாவது சீர் மரபினர் என்ற இரண்டு பெரும் சமூகத்தினர் மற்றும் பல சிறுசிறு சமூகத்தினர் இணைக்கப்பட்டு அந்த 20 சதவீதம் என்பதை இன்றைக்கு நல்ல முழுப் பயனோடு வெற்றிகரமாக அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

14-15 மணி

அதற்கு மேலும் ஒரு துணையாக, அவர்களை கை தூக்கி விடத்தான் ஒரு குடும்பத்தில் பெற்றோர்கள் அல்லது உடன்பிறப்புக்கள் பட்டதாரியாக இல்லாவிட்டால் அவர்களுக்கு ஐந்து மதிப்பெண்கள் அதிகமாகத் தர வேண்டும் என்று அறிவித்ததன் காரணமாக, நான் இங்கே பெருமையோடு, மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது வரையிலே வந்துள்ள பட்டியல்படி பொறியியல் கல்லூரியில் 3,876 பேர் இப்போது சேர்ந்திருக்கிறார்கள். அதிலே 504 பேர் இந்த ஐந்து மார்க்கால் பயன் பெற்று இன்றைக்குப் பொறியியல் கல்லூரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மருத்துவக் கல்லூரியில் இதுவரையில் வந்துள்ள பட்டியலின்படி மொத்தம் 957 பேர்களில் 212 பேர்கள் இந்த ஐந்து மதிப்பெண்ணால் இன்றைக்கு இடம் பெற்றிருக்கிறார்கள். கால்நடை பட்டப் படிப்பில் 268 மொத்தம். அதிலே 105 பேர் இந்த ஐந்து மார்க்கால் பயன் பெற்று வந்திருக்கிறார்கள். சட்டக் கல்லூரியில் 1,348 பேர்கள். மூன்றாண்டு பட்டப் படிப்பில் 492-க்கு இந்த ஐந்து மார்க்கினால் பலன் பெற்றவர்கள் 309 பேர். ஐந்தாண்டுப் படிப்பிலே 438 பேருக்கு இந்த ஐந்து மார்க்கினால் பலன் பெற்றவர்கள் 232 பேர். மாலைக் கல்லூரியில் 418-க்கு இந்த ஐந்து மார்க்கினால் பலன் பெற்றவர்கள் 212 பேர். மொத்தம் 1,348 பேர்களுக்கு 753 பேர் இந்த ஐந்து மதிப்பெண்களால் பலன் பெற்றிருக்கிறார்கள். வேளாண்மைக் கல்லூரியில் 388 பேர் மொத்தம். அதிலே இந்த ஐந்து மதிப்பெண்களால் பலன் பெற்றவர்கள் 246 பேர். இவர்கள் எல்லாம் பட்டணக் கரையிலிருந்து வந்தவர்கள் அல்ல. கிராமங்களிலிருந்து, பட்டிதொட்டிகளிலிருந்து, குக்கிராமங்களிலிருந்து, நமக்கே பெயர் விளங்காத பல ஊர்களிலிருந்து வந்துள்ள கிராமப்புறத்து இளைஞர்கள் இந்தப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று எண்ணுகிறபோது இதை இலவசம் என்று சொல்லி நாம் ஒதுக்கி தள்ளிவிட முடியாது. இது இலவசம் அல்ல. நமக்கெல்லாம் அள்ளி அள்ளி வழங்குகிற பரவசம் இது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

1990 ஆகஸ்டு 21]

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கருத்தாக மீண்டும் சொல்கிறேன். கருத்தாகத்தான் சொல்கிறேன், எதிர்க்கவில்லை. எதிர்ப்பு என்பது வேறு, கருத்து என்பது வேறு. இன்றைக்கு சாதாரணமாக ஒரு அரசு அலுவலகத்தில் பியூனாக இருப்பவன் கூட பட்டம் பெற்று விடுகிறான். நாம் திறந்தவெளி பல்கலைக் கழகங்களையெல்லாம் திறந்து வைத்திருக்கிறோம். ஒரு பக்கம் எல்லோரையும் பட்டம் பெறலாம் என்று சொல்லிவிட்டு இன்னொரு பக்கம் பட்டத்தைப் பெற்றால் ஐந்து மார்க் உன்னுடைய குழந்தைக்கு குறையும் என்று சொல்வோமானால் முரணாக வருவதைப் போல தெரிகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஐந்து மார்க் குறைக்கப்படும் என்று சொல்லவில்லை. ஐந்து மார்க் அதிகப்படுத்தப்படும் என்று சொல்லி அவர்களுக்கு ஊக்கத்தைத் தருகிறோம். பட்டதாரிகள் இருக்கிற வீடுகளிலிருந்து இன்னொரு பட்டதாரி வர வேண்டாம் என்பதல்ல. அதையும் மீறி வருகிறார்கள். நான் இங்கே படித்த இந்தப் பட்டியலில் 2,000 பேருக்கு 500 பேர் வந்திருக்கிறார்கள் என்றால் மிச்சம் 1,500 பேர்கள் பட்டதாரிகள் வீடுகளிலிருந்து வந்தவர்கள் தான். எனவே, பட்டதாரிகளே இல்லாத கிராமத்து விவசாயிகளின் வீட்டிலிருந்து ஒருவன் பட்டதாரியாக வர வேண்டும் என்பதற்காக செய்யப்பட்ட புரட்சிகரமான மாற்றம் இது. இதைக் கூட அகில இந்திய அளவிலே தேசிய முன்னணி அரசு ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்துமானால் பொருளாதாரத்தைப் பற்றிப் பேசுகிற இந்தப் பிரச்சினை கூட இல்லாமல் போய் விடும் என்றே கருதுகிறேன். இப்போது தான் உண்மையிலேயே 'சோசியலி' என்ற அளவோடு நின்ற இந்தப் பிரச்சினை 'எஜுகேஷனலி பேக்வேர்டிற்கும்' இது கிடைத்து இருக்கிறது. அதை நாம் செய்திருக்கிறோம். தமிழ் நாட்டிலே இந்தியாவினுடைய தென்கோடி முனையிலே உருவாகிற கருத்துக்களை இன்று அகில இந்தியாவும் ஏற்றுக் கொள்கிற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படித்தான் நபிகள் நாயகம் பிறந்தநாள் விழாவிற்கு நாம் தான் விடுமுறை விட்டோம். இன்றைக்கு அகில இந்தியா அளவில் நபிகள் நாயகம் பிறந்தநாள் விழாவிற்கு விடுமுறை என்று வி. பி. சிங் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். மே தின விழாவிற்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை என்று நாம் தான் விட்டோம். இன்றைக்கு அகில இந்திய அளவில் மே தின விழாவிற்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை என்று தேசிய முன்னணி அரசின் தலைவர் வி. பி. சிங் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.

வி. பி. சிங் காங்கிரசில் இருந்தபோது என்ன செய்தார் என்று கேட்டார்கள். காங்கிரசில் இருந்த காரணத்தால் செய்யவில்லை, தேசிய முன்னணி அரசை உருவாக்கிய காரணத்

தால் செய்கிறார் என்பதைத் தான் அதற்குப் பதிலாக அளிக்க முடியும் என்று கூறி, இவ்வளவு மாறுபட்ட கருத்துக்கள், வேகமான பேச்சுகள், விறுவிறுப்பான பேச்சுகள் இருந்தாலும் கூட அனைவரும் ஒருமுகமாக இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியின் சார்பில் நம்முடைய சுந்தரதாஸ் போன்றவர்கள் எனக்கும் நன்றி தெரிவித்ததற்காக அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து ஆதரித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர், நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர், நண்பர் பாண்டியன், நம்முடைய லத்தீப் அவர்கள், நம்முடைய வல்லரசு அவர்கள் மற்றுமுள்ள நண்பர்கள், ஆளும் கட்சி சார்பில் ஆதரித்துப் பேசிய இரகுமான்கான் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் பூவராகன் அவர்கள் இதை ஆதரிக்க எப்போதுமே கடமைப்பட்டவர். நல்லவேளையாக தேசிய முன்னணி அரசு கொண்டு வந்த காரணத்தால் இது போதவில்லை என்று சொல்லவில்லை. இல்லாவிட்டால் இதுவும் போதவில்லை என்று சொல்வார். இருந்தாலும் அனைவரும் மனநிறைவு அடையத்தக்க அளவுக்கு ஒரு அருமையான தீர்மானத்தை இங்கே நாம் வழி மொழிந்திருக்கிறோம். நான் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்த அத்தனை பேருக்கும் நன்றி கூறி இதை ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நீண்ட நெடுங்காலமாகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் நிறைவேறாத கோரிக்கையாக இருந்த மத்திய அரசின் பணிகளிலும் மற்றும் மத்திய அரசுக்குச் சொந்தமான பொதுத் துறை நிறுவனங்களின் பணிகளிலும் இட ஒதுக்கீடு என்பதை அரசியல் சட்டத்தின் 340-வது பிரிவின்படி திரு. மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா ஆட்சியில் அமைக்கப்பட்ட மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்று 27 விழுக்காடு ஒதுக்கீடு செய்து ஆகஸ்ட் 7-ஆம் நாள் பாராளுமன்றத்தில் தேசிய முன்னணி அரசின் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் அறிவித்ததுடன் அதனை அன்று முதலே நடைமுறைப்படுத்த ஆணையும் பிறப்பித்துள்ளதை இந்தப் பேரவை மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றது.

*12-5-1989* அன்று இந்தப் பேரவை பல ஆண்டுகளாகக் கவனிக்கப்படாமல் இருந்த மண்டல் குழு பரிந்துரைகளை